# CLASS 12 - ECONOMICS

**2024-2025**

## MINIMUM LEVEL STUDY MATERIAL

www.Padasalai.Net

**NAME :**

**CLASS :**

**SCHOOL :**

Prepared by-

**A. AYYAPPAN** M.A., B.Ed.,

PG ASST ( ECONOMICS )

GBHSS, WALAJAPET, RANIPET DISTRICT

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# 1. பேரியல் பொருளாதாரம்

1 **பேரியல் பொருளியல் இலக்கணம்?**
பொருளாதார அமைப்பை முழுமையும் படிப்பது. ஒட்டுமொத்த தேசிய வருவாய் வேலை வாய்ப்பு நாட்டு உற்பத்தி போன்றவை உள்ளடக்கியது.

2 **பணவீக்கம் என்ற பதத்தின் பொருள்?**
பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதை குறிக்கும்.

3 **பொருளாதாரம் என்பதன் பொருள்?**
மக்கள் தங்கள் பிழைப்பை அமைத்துக் கொள்ளும் முறையை குறிப்பது---A. J பிரவுண்

4 **வளர்ச்சி நிலை அடிப்படை பொருளாதார வகை?**
வளர்ந்த; வளராத ;வளரும் பொருளாதாரம்.

5 **முதலாளித்துவம் என்றால் என்ன?**
பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தும் தனியார் வசம் இருக்கும். உ.தா(USA)

6 **பொருளாதார மாதிரி இலக்கணம்?**
உண்மை சூழலை விளக்குவது. பொருளாதாரம் எவ்வாறு இயங்குகிறது என விளக்குகிறது.

7 **வருமான வட்ட ஓட்டம்?**
பல்வேறு துறைகளுக்கு இடையே உள்ள தொடர்பை விளக்குவது.

# 2. நாட்டு வருமானம்

1 **நாட்டு வருமானம் ?**
ஒரு நாட்டில் ஓராண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டம் மற்றும் பணிகளின்

2 **GNP கணக்கிடும் வாய்ப்பாடு?**
GNP=C+I+G+(X-M)+(R-P)

3 **NNPக்கும் NDPக்கும் உள்ள வேறுபாடு?**
NNP=GNP-தேய்மான கழிவு.
NDP=GDP-தேய்மான கழிவு.

4 **GNPக்கும்NNPக்கும் உள்ள தொடர்பு?**
GNP=C+I+G+(X-M)+(R-P)
NNP=GNP-தேய்மான கழிவு.

5 **தனிமனிதர் வருமானம்?**
ஓராண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு மனிதருக்கு பல வழிகளில் கிடைக்கும் மொத்த வருமானம் ஆகும்.

6 **GDP குறைப்பான்?**
GDP குறைப்பான்= பண மதிப்புGDP/உண்மை GDP×100

7 **நாட்டு வருமான கணக்கீட்டில் சொந்த நுகர்வு சிக்கல்?**
விவசாயிகள் தங்கள் சொந்த நுகர்வுக்கு உற்பத்தியில் ஒரு பகுதியை ஒதுக்கி வைக்கின்றனர். அவ்வாறு ஒதுக்கியது நாட்டு வருமானத்தில் சேர்க்கப்பட்டதா கண்டறிவதில் சிக்கல்.

A. AYYAPPAN, PG ASST (ECONOMICS), M.A., B.Ed., GBHSS, WALAJAPET, RANIPET DISTRICT
www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# 3. வேலைவாய்ப்பு மற்றும் வருமான கோட்பாடுகள்

1 **முழு வேலைவாய்ப்பு வரையறு?**
விருப்பமில்லா வேலையின்மை இல்லாமல் இருப்பது___கீன்ஸ்.

2 **ஊரக வேலையின்மையின் முக்கிய இயல்பு?**
*மறைமுக வேளாண்மை
*பருவ கால வேலையின்மை.

3 **உடன்பாடில்லா வேலையின்மை?**
உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுதல்.

4 **தற்போதுள்ள சூழலில் ஆள் குறைப்பதற்கான காரணம்?**
*பணியாளர்களின் திறமை குறைவு.
*இயந்திரமாதல்.
*நவீன தொழில்நுட்பம் முறைகள்.

5 **சே விதியின் எடுகோள்கள்?**
*முழு வேலை நிலை.
*சந்தையில் நிறைவு போட்டி நிலவுதல்.
*கூலி ,விலையில் நெகிழ்வு தன்மை.

6 **விளைவு தேவை?**
உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மீது உண்மையிலேயே செலவு செய்கின்ற பணத்தின் அளவு.

7 **தொகு அளிப்பின் கூறுகள்?**
*மொத்த நுகர்வு செலவு.
*மொத்த தனியார் சேமிப்பு.
*நிகர வரி வசூல்.
*தனிநபர் வெளிநாட்டிற்கு வழங்கிய நிவாரணத் தொகை.

# 4. நுகர்வோர் சார்பும் முதலீடு சார்பும்

1 **நுகர்வு சார்பு?**
வருவாய்க்கும், நுகர்வுக்கும் உள்ள தொடர்பு. C=f(Y)

2 **நுகர்வு நாட்டம்?**
பல்வேறு வருமானத்தை ,நுகர்வுக்காக செலவிடப்படுவதை குறிக்கும்.

3 **சராசரி நுகர்வு நாட்டம்?**
வருமானத்திற்கும் ,நுகர்வுக்குமமான வீதம்.
$APC=C/Y$

4 **இறுதிநிலை நுகர்வு நாட்டம்?**
வருமானம் மாற்றத்திற்கும், நுகர்வு மாற்றத்திற்கும் இடையேயான வீதம்.
$MPC=\Delta C/\Delta Y$

5 **சேமிப்பு நாட்டம்?**
வருவாய்க்கும் சேமிப்பிற்கும் உள்ள தொடர்பு. $S=f(Y)$

6 **சராசரி சேமிப்பு நாட்டம்?**
$APS=S/Y$ , வருவாய்க்கும், சேமிப்பிற்கும் உள்ள விகிதம்.

7 **இறுதிநிலை சேமிப்பு நாட்டம்?**
$MPS=\Delta S/\Delta Y$ , வருவாய் மாற்றத்திற்கும், சேமிப்பு மாற்றத்திற்கும் உள்ள விகிதம்

8 **பெருக்கி வரையறு?**
$K=\Delta Y/\Delta I$ , நாட்டு வருமான மாற்றத்திற்கும், முதலீடு மாற்றத்திற்கும் உள்ள விகிதம்

9 **முடுக்கி வரையறு?**
$B=\Delta I/\Delta C$ , முதலீட்டின் மாற்றத்திற்கும், நுகர்வு மாற்றத்திற்கும் உள்ள விகிதம்

A. AYYAPPAN, M.A., B.Ed., PG ASST (ECONOMICS) GGHSS, WALAJAPET, RANIPET DISTRICT www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# 5. பணவியல் பொருளாதாரம்

1 **பணத்தின் இலக்கணம்?**
பணம் எதை செய்கிறதோ, அதுவே பணம்__வாக்கர்.

2 **பண்டமாற்று என்றால் என்ன?**
பொருட்களை பொருட்களுக்காக மாற்றிக் கொள்ளும் முறை.

3 **பண்ட பணம் என்றால் என்ன?**
ஒரு பண்டம் பணமாக பயன்படுத்துவது.
(எ.கா) தோல், உப்பு

4 **பொன் திட்டம்?**
ஒரு பணத்தின் அலகு ஒரு குறிப்பிட்ட எடையிலான பொன் அளவால் குறிப்பிட படுவது.

5 **நெகிழி பணம்? (உ.தா) தருக?**
இது காகித பணத்திற்கு மாற்றாகும்.
(உ.தா) ரெக்க அட்டை, கடன் அட்டை, பற்ற அட்டை.

6 **பணவீக்கம் இலக்கணம்?**
குறைந்த அளவு பண்டங்கள், அதிக அளவு பணத்தை துரத்தும்__கோல்பர்ன்.

7 **தேக்க வீக்கம் என்றால் என்ன?**
வேலையின்மையும் ,பணவீக்கமும் ஒன்றிணைந்த சூழ்நிலை தேக்க நிலை ஆகும்.

## 6. வங்கியியல்

1 **வணிக வங்கிகள் வரையறு?**
மக்கள் வைப்புகளை பெற்று ,அதனை நிறுவனங்களுக்கு மக்களுக்கும் கடனாக அளிக்கும் நிதி அமைப்பு.

2 **கடன் உருவாக்கம்?**
*கடன் முன்பண அளிப்பினை அதிகரிக்கும் ஒரு செயல்.

3 **மைய வங்கி வரையறு?**
*அரசின் பணம், அளிப்பு ,வட்டி வீதம் ஆகியவற்றை நிர்வகிக்கும் ஒரு அமைப்பாகும்.
*வணிக வங்கிகளை மேற்பார்வையிடுதல்.

4 **CRR மற்றும்SLR வேறுபடுத்துக?**
CRR : வணிக வங்கிகள் குறிப்பிட்ட சதவீதத்தை ரொக்கமாக மைய வங்கியில் இருப்பாக வைப்பது.
SLR: வணிக வங்கிகள் தன்னிடம் இருப்பாக உள்ள ரொக்கம், தங்கம் ,பத்திரம், நீர்மை தன்மை கொண்ட சொத்துக்கள்.

5 **வெளி அங்காடி நடவடிக்கை?**
மைய வங்கி பொதுச்சந்தையில் அரசின் கடன் பத்திரங்களை, வெளியிடுவது, திரும்ப பெறுவது.

6 **கடன் விநியோக பகிர்வு?**
மைய வங்கி நாட்டின் பண சூழ்நிலைக்கு ஏற்ப வணிக வங்கிகள் வழங்கும் கடனை கட்டுப்படுத்துவது.

7 **விவசாய கடன் வழங்கும் துறையின் பணி?**
*விவசாய கடன் தொடர்பான வினாக்களை ஆய்வு செய்தல் நிபுணர்களைக் கொண்டு.
*மைய, மாநில, கூட்டுறவு வங்கிகள், வங்கி நடவடிக்கைகளுக்கு ஆலோசனை வழங்குதல்.

A. AYYAPPAN, M.A., B.Ed., PG ASST (ECONOMICS) GBHSS WALAJAPET, RANIPET DISTRICT www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# 7. பன்னாட்டு பொருளியல்

1 **பன்னாட்டு பொருளியல்?**
பொருட்களை நாடுகளுக்கிடையே பரிமாற்றம் செய்வதை பற்றி படிப்பது.

2 **பன்னாட்டு வாணிகம் வரைவிலக்கணம்?**
பொருட்களை ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளிடையே பரிமாற்றம் செய்வதை குறிக்கும்.

3 **பன்னாட்டு வாணிக நன்மைகள்?**
*வேலைவாய்ப்பு அதிகரித்தால்.
*போக்குவரத்து வசதிகள் வளரும்.
*நாடுகளிடையே நட்புணர்வு.

4 **வாணிப வீதம்?**
ஏற்றுமதிக்கும், இறக்குமதிக்கும் இடையே உள்ள விகிதம்.

5 **வாணிப செலுத்து நிலை?**
ஒரு நாட்டின் குறிப்பிட்ட ஆண்டில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்பு குறிக்கும்.

6 **செலாவணி மாற்று வீதம்?**
ஒரு நாட்டின் பணத்தை மற்றொரு நாட்டின் பணத்திற்கு மாற்றும் விகிதம்.

7 **அந்நிய செலாவணி பொருள்?**
ஒரு நாட்டின் மைய வங்கியில் இருப்பில் உள்ள ,மற்ற நாடுகளின் பணத்தைக் குறிக்கும்.

# 8. பன்னாட்டு பொருளாதார அமைப்புகள்

1 **சிறப்பு எடுப்புரிமை?**
*IMF இல் உறுப்பு நாடுகள் வைத்துள்ள பணத்தின் இருப்பை குறிக்கும்.
*மூலதன பங்குத்தொகை அளவிற்கு ஏற்ப திரும்பப் பெறுவது.

2 **ஆசியான் இரண்டு நோக்கம்?**
*பொருளாதார வளர்ச்சி பண்பாட்டு மாற்றத்தை துரிதப்படுத்துவது.
*தென் கிழக்கு ஆசிய பகுதிகளை அமைதியை மேம்படுத்துவது.

3 **ஐ. பி .ஆர். டி இரண்டு கடன் திட்டங்கள்?**
*சொந்த நிதியிலிருந்து கடன் வழங்குவது.
*கடன் நிதியிலிருந்து கடன் வழங்குவது.

4 **பொதுச் சந்தை வரையறு?**
புவியில் குறிப்பிட்ட பகுதியில் தடையற்ற வாணிகம் உற்பத்தி காரணி இடம்பெயர்வு அமைக்கும் அமைப்பே ஆகும். (ஐரோப்பிய பொது அங்காடி)

5 **தடையற்ற வாணிக்கு பகுதி?**
ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட உறுப்பு நாடுகள் வணிக தடைகளை குறைக்க , தங்கு தடையின்றி வாணிபம் செய்ய ஒத்துழைக்கும் பகுதி.(SAFTA, EFTA)

6 **சார்க் தலைமையகம்?**
*டிசம்பர் 8 ,1985 காட்மாண்டு (நேபாளம்) அமைக்கப்பட்டது.
*1987 -லிருந்து செயல்படுகிறது.

7 **உலக வங்கி இரண்டு துணை நிறுவனங்கள்?**
*பன்னாட்டு மேம்பாட்டு அமைப்பு (IDA)
*பன்னாட்டு நிதி கழகம் (IFC).

A. AYYAPPAN M.A., B.Ed., M.Phil. PG ASST (ECONOMICS) GBHSS WALAJAPET, RANIPET DISTRICT

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## 9. நிதிப் பொருளியல்

1 **பொது நிதி வரையறு?**
அரசின் வருவாய், செலவு இயல்பையும் கொள்கைகளையும் ஆராய்வதே__ஆடம் ஸ்மித்.

2 **பொது வருவாய் என்றால் என்ன?**
அரசுக்கு அனைத்து மூலங்களின் வழியாக வரும் வருமானம்.

3 **வரி கட்டணம் வேறுபடுத்துக?**
வரி: அரசுக்கு கட்டாயமாக செலுத்தக்கூடியது. (வருமான வரி)
கட்டணம்: கட்டாயம் செலுத்து கூடியது அல்ல (வாகன நுழைவு கட்டணம்)

4 **சுழிய அடிப்படை செலவுத் திட்டம்?**
*1987 -88 இல் திட்டம் தாக்கல் செய்யப்பட்டது.
*ஒவ்வொரு செலவினமும் புதிதாக கருதப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் மதிப்பீடு செய்யப்படும்.

5 **நேர்முக வரிக்கு இரு உ.தா?**
*வருமான வரி
*நிறுவன வரி.

6 **GSTயின் கூறுகள்?**
CGST, SGST, IGST.

7 **பொது கடன் என்பதன் பொருள்?**
அரசு வெளிநாடு மற்றும் உள்நாட்டு நிறுவனங்களிடம் கடன் பெறுவது.

## 10. சுற்றுச்சூழல் பொருளியல்

1 **சுற்றுச்சூழல் என்பதன் பொருள் ?**
நம்மைச் சுற்றியுள்ள இயற்கை வளங்கள் காற்று ,நீர் தாவரங்கள் உயிரினங்கள் அடங்கிய தொகுப்புகளின் உறவு பற்றியது.

2 **சுழலியல் என்றால் என்ன?**
உயிரினங்களுக்கு இடையே பரஸ்பர உறவும் ,அவைகளின் சுற்றுச்சூழலை பற்றி படிக்கும் இயல்.

3 **தலா கரியமில வாயு அதிகமான நாடுகள்?**
அமெரிக்கா ,ஜெர்மனி ,இங்கிலாந்து, சவுதி அரேபியா.

4 **சுற்றுச்சூழல் பொருட்கள் ?**
சந்தையிடா பொருட்கள் ,தனியார் சொத்துரிமை இல்லாத பொருட்கள்.
(உ.தா) - (மலைகள், ஆறுகள் கடற்கரையில்.)

5 **ஒலி மாசு கட்டுப்படுத்தும் வழிமுறைகள்?**
*ஒலி தடைகளை ஏற்படுத்துதல்.
*ஒலிபெருக்கிகளை கட்டுப்படுத்துதல்.
*போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்துதல்.

6 **உலக வெப்பமயமாதல்?**
பல்வேறு மனித நடவடிக்கை காரணமாக, இயல்பினை விட பூமி மற்றும் வளிமண்டலம் வெப்பநிலை அதிகரிப்பதாகும்.(பனிப்பாறை உருகி கடல் மட்டும் உயரம்)

7 **விதைப்பந்து என்பதன் பொருள்?**
விதையை உரம் கலந்த களிமண்ணால் மூடப்பட்டு, பிறகு உலர்த்த பட்டு இதை எங்கு வேண்டுமானாலும் விதைக்கலாம் .

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# 11. பொருளாதார மேம்பாடும் திட்டமிடலும்

1 **பொருளாதாரம் முன்னேற்றம் வரையறு?**
நாட்டின் பொருளாதார கட்டமைப்பில் நிகழும் நல்ல மாற்றங்களை குறிக்கும்.

2 **பொருளாதாரம் முன்னேற்ற குறியீடுகள்?**
*நாட்டின் மொத்த உற்பத்தி. (GNP)
*தலா வருமானம்.
*சமூக குறியீடுகள்.

3 **பொருளாதார வளர்ச்சி, பொருளாதார முன்னேற்றம் வேறுபடுத்துக?**
பொருளாதார வளர்ச்சி: வளர்ந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை கையாளுகிறது.
பொருளாதாரம் முன்னேற்றம்: வளரும் நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்தை கையாளுகிறது.

4 **மொத்த நாட்டு உற்பத்தி?**
ஒரு நாட்டின் ஒரு ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள், பணிகள் ,வெளிநாட்டு வருமானம் மொத்த மதிப்பை குறிக்கும்.

5 **பொருளாதார திட்டமிடல் வரைவிலக்கணம்?**
தனியார் உற்பத்தி மற்றும் விநியோக நடவடிக்கைகளை கூட்டாக கட்டுப்படுத்துவது,ஒழுங்கு படுத்துவதை குறிக்கும்__ராபின்ஸ்.

6 **பொருளாதார முன்னேற்ற சமூக குறியீடுகள்?**
மக்களின் அடிப்படை, கூட்டுதேவையை பூர்த்தி செய்வது(சுகாதாரம், கல்வி, உணவு, குடிநீர் வீட்டு வசதி)

7 **நிதி ஆயோக் பற்றி குறிப்பு வரைக?**
*திட்டக் குழுவுக்கு மாற்றாக ஏற்படுத்தப்பட்டது. *ஜனவரி 1 2015 அமைக்கப்பட்டது.
*தலைவர் -பிரதமர்.

# 12. புள்ளியியல் முறைகளும் பொருளாதார அளவையியலும் ஓர் அறிமுகம்

1 **புள்ளியியல் என்றால் என்ன?**
மதிப்பீடுகளையும் மற்றும் நிகழ்வுத்தகவு பற்றிய அறிவியல்__போரடிங் டன்.

2 **புள்ளியியலின் வகை?**
*விவரிப்பு புள்ளியில்.
*உய்த்துணர்வு புள்ளிகள்.

3 **உய்த்துணர்வு புள்ளிகள் என்றால் என்ன?**
கூறுவின் விவரங்களை பகுப்பாய்வு செய்து, அதனை முழு தொகுப்பின் விவரங்களுக்கு அறிந்து கொள்வது.

4 **புள்ளி விவரங்களின் வகை?**
*அளவு விவரங்கள்.
*பண்பு விவரங்கள்.

5 **உடன் தொடர்பு பகுப்பாய்வு?**
இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாறிகள், எவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு மாறுகிறது என கணக்கிடுகிறது.

6 **ஒட்டுறவு என்பதை வரையறை?**
இரு மாறிகளுக்கு இடையே உள்ள உறவை விளக்குகிறது.

7 **பொருளாதார அளவையியல்?**
பொருளியல், புள்ளியியல், மற்றும் கணிதம். 3 பாடங்களின் ஒருங்கிணைப்பாகும்.

A. AYYAPPAN, M.A., B.Ed., PG ASST (ECONOMICS) GBHSS WALAJAPET RANIPET DISTRICT

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# 1. பேரியல் பொருளாதாரம்

1. **பேரியல் பொருளாதாரத்தின் முக்கியத்துவம்?**
   - ஒட்டுமொத்த பொருளாதார செயல்பாடுகளை புரிந்து கொள்ளவும்.
   - அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும்.
   - நடப்பு பிரச்சனைகளுக்கு அறிவியல் பூர்வமாக ஆராயவும்.
   - பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காணவும் உதவுகிறது.

2. **பொருளாதார அமைப்பு வகைகள்?**
   - முதலாளித்துவ பொருளாதார அமைப்பு.
   - சமத்துவ பொருளாதார அமைப்பு.
   - கலப்பு பொருளாதார அமைப்பு

3. **முதலாளித்துவத்தின் சிறப்பு?**
   - தனியார் சொத்துரிமை.
   - லாப நோக்கம்.
   - போட்டியிடும் சுதந்திரம்.
   - விலை இயங்குமுறை.

4. **சமத்துவத்தின் குறைகள்?**
   - சிவப்பு நாடா நிலை.
   - ஊக்கமின்மை.
   - தெரிவு செய்யும் சுதந்திரம் குறைவு.
   - அதிகாரம் குவிதல்.

5. **கலப்பு பொருளாதாரம் முக்கிய இயல்பு?**
   - சொத்து உற்பத்தி சாதன உரிமம் சமம்.
   - பொது துறையும் , தனியா துறையும் இணைந்து இருத்தல்.
   - பொருளாதார திட்டமிடல்.
   - பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படுகிறது.

6. **முதலாளித்தவற்றையும் சமத்துவத்தையும் வேறுபடுத்துக?**

| முதலாளித்துவம் | சமத்துவம் |
|---|---|
| *உற்பத்தி மூலங்கள் தனியார் வசம்.<br>*லாப நோக்கம்<br>*அரசின் பங்கு குறைவு.<br>*சமனற்ற வருவாய். | *உற்பத்தி மூலங்கள் அரசு வசம்.<br>*சமூக நலன்.<br>*அரசின் பங்கு அதிகம்.<br>*சமநிலை வருவாய். |

7. **இரு துறை சுழல் ஓட்ட மாதிரி?**
   - இல்ல துறையும், நிறுவன துறையும் இணைந்து செயல்படுகிறது.
   - **Y=C+I**

A. AYYAPPAN M.A., B.Ed., PG ASST (ECONOMICS) GGHSS, WALAJAPET, RANIPET DISTRICT www.Padasalai.Net

# 2. நாட்டு வருமானம்

1. **தலைவீத வருமானம்?**

   தலா வருமானம் = $\frac{\text{நாட்டு வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$

2. **தனி மனிதர் வருமானம் செலவிடக்கூடிய வருமானம் வேறுபாடு?**
   - தனிநபர் வருமானம்=நாட்டு வருமானம்+மாற்றுச் செலுத்துகைகள்.
   - செலவிடக் கூடிய வருமானம்=தனிநபர் வருமானம்-நேர்முக வரிகள்.

3. **காரணி செலவில் NNP குறிப்பு தருக?**

   காரணி செலவில்**NNP**=சந்தை விலையில்**NNp**-மறைமுக வரி+மானியம்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**4. செலவு முறை பற்றி ஒரு சிறு குறிப்பு தருக?**

- ஒரு ஆண்டில் சமுதாயத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து செலவுகளையும் கூட்டி தேசிய வருவாயில் கணக்கிடப்படுகிறது.
- **GNP=C+I+G+(X-M)**
- **C:**நுகர்வு செலவு,**I:** தனியார் முதலீட்டு செலவு,
- **G:** அரசு செலவு,**(X-M):** நிகர ஏற்றுமதி இறக்குமதி.

**5. நாட்டு வருமானம் கணக்கிடுதலில் "இரு முறை கணக்கெட்டு சிக்கல் தீர்வு?**

- ஒரே பொருள் பல இடங்களில் மதிப்பிடப்படும் வாய்ப்பு இம்முறையில் உள்ளது.
- இறுதி உற்பத்திக்கு எந்த ஒரு பொருள் மூலப்பொருட்களாக அல்லது இடைநிலைப்
- பொருளாக உள்ளதோ அதை உற்பத்தி கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது.
- துணியின் விலையில் நூலின் விலையும், நூலின் விலையில் பஞ்சின் விலையும் உள்ளது.

**6. நாட்டு வருமானத்தை கணக்கிடுதலில் பயன்கள்?**

- பொருளாதார செயல்பாடுகளை கணக்கிடவும்.
- நாட்டின் வளர்ச்சி நிலை அறியவும்.
- பொருளாதாரம் முன்னேற்ற எதிர்கால போக்கை அறியவும்.
- வாழ்க்கை தரத்தை நாடுகளிடையே ஒப்பிட்டுப் பார்க்கவும் பயன்படுகிறது.

## 3. வேலைவாய்ப்பும் வருமான கோட்பாடுகளும்.

1. **அ). பருவ கால வேலையின்மை:** ஒரு வருடத்தில் சில காலங்கள் மட்டுமே நிலவும் வேலையின்மை. (விவசாயம்)
**ஆ. உடன்பாடில்லா வேலையின்மை:** உழைப்பாளர்கள் மற்றொரு இடத்திற்கு இடம் பெயராமை, பற்றாக்குறை, காரணங்களால் ஏற்படும் வேலையின்மை ஆகும்.
**இ). கற்றோர் வேலையின்மை:** கல்வி தகுதி பெற்றவர்களுக்கு சில நேரங்களில் வேலை கிடைப்பதில்லை.

2. **J. P சே விதியின் விளைவுகள்?**
   - அதிக உற்பத்திக்கோ , வேலையின்மைக்கு வாய்ப்பில்லை.
   - அரசின் தலையீடு இருக்காது.
   - வட்டி வீதம், சேமிப்பையும், முதலீட்டையும் சமநிலைக்கு கொண்டு வரும்.
   - பரிவர்த்தனைக்கு மட்டுமே பணம் செயல்படும்.

3. **தொகுத்தேவை? அதன் கூறுகள்?**
   - உழைப்பாளர்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பதால், எவ்வளவு வருவாய் கிடைக்கும் எதிர்பார்க்கிறோமோ அதுவே தொகு தேவையாகும்.
   - **AD=C+I+G+(X-M)**
   - **C**-நுகர்வு,**I**-முதலீடு,**G**-அரசு செலவு, **(X-M)**-நிகர ஏற்றுமதி.

4. **தொன்மையும் கீன்சியும் ஒப்பிடுக?**

| கீன்சியம் | தொன்மையியம் |
|---|---|
| *குறுகிய கால சமநிலை.<br>*சேமிப்பு குறைவு.<br>*பேரியல் அணுகுமுறை.<br>*அரசின் தலையீடு உண்டு. | *நீண்ட கால சமநிலை.<br>*சேமிப்பு அதிகம்.<br>*நுண்ணியல் அணுகுமுறை.<br>*அரசு தலையிடுயில்லை. |

A. KARUPPAIAH M.A., B.Ed. PG ASST (ECONOMICS) GBHSS, WALAJAPET, RANIPET DISTRICT

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## 4. நுகர்வு சார்பும், முதலீடுச் சார்பு

**1. கீன்சின் நுகர்வு சார்ந்த உளவியல் விதி?**

- வருமானம் உயரும் போது நுகர்வு உயரும்.ஆனால் வருமானம் அதிகரிக்கும் அளவிற்கு நுகர்வு அதிகரிக்காது.
- அதிகரித்த வருமானம் .நுகர்வுக்கும் சேமிப்புக்கும் சில விகிதத்தில் பிரிக்கப்படுகிறது.

**2. தன்னிச்சையான முதலீடு, தூண்டப்பட்ட முதலீடு வேறுபடுத்துக?**

| தன்னிச்சையான முதலீடு | தூண்டப்பட்ட முதலீடு: |
|---|---|
| *தன்னிச்சையானது.<br>*வருவாயை பொருத்த நிகழாதது.<br>*நல நோக்க முடியாது. | *திட்டமிடப்பட்டது.<br>*வருவாயை பொருத்த நிகழ்வது.<br>*லாப நோக்கமுடையது. |

**3. நுகர்வு சார்பை பாதிக்கும் அக ,புற காரணிகள்?**

| அகவய காரணிகள் | புறவய காரணிகள் |
|---|---|
| *முன்னெச்சரிக்கை நோக்கம்.<br>*எதிர்பார்க்கும் நோக்கம்.<br>*வாணிப நோக்கம். | *வருமான பகிர்வு.<br>*விலை அளவு.<br>*வட்டி விகிதம். |

**4. முடுக்கி , பெருக்கி வேறுபாடு?**

| முடுக்கி | பெருக்கி |
|---|---|
| * முதலீடு மாற்றத்திற்கும் ,நுகர்வு மாற்றத்திற்கும் உள்ள விகிதம்.<br>*$B=\Delta I/\Delta C$. | *வருமான மாற்றத்திற்கும், முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள விகிதம்.<br>*$K=\Delta Y/\Delta I$. |

**5. மிகைப் பெருக்கி?**

- தன்னிச்சை முதலீடும் மற்றும் தூண்டப்பட்ட முதலீடும் இரண்டையும் உள்ளடக்கி இருக்கும்.
- எளிய பெருக்கி தன்னிச்சை முதலீட்டை மட்டும் உள்ளடக்கி இருக்கும்.

**6. பெருக்கி குறைபாடுகள்?**

- பழைய கடன்களை திரும்ப செலுத்துதல்.
- செல்வத்தை வாங்குதல்.
- நுகர்வு பொருட்கள் கிடைக்காமை.
- முழு வேலை வாய்ப்பு நிலை.

A. AYYAPPAN, M.A., B.Ed., PG ASST (ECONOMICS) GHSS, WALAJAPET RANIPET DISTRICT

## 5. பணவியல் பொருளியல்

**1. உலோக பணம் பற்றி குறிப்பு வரைக?**

- உலோகத்தால் ஆன தங்கம், வெள்ளி, போன்ற பணத்தின் மதிப்பில் பயன்படுத்துவது.
- இந்த நாணயத்தில் முக மதிப்பு மற்றும் உள்ளடக்க மதிப்பு சமமாக இருக்கும்.

**2. பணம் அளிப்பு என்றால் என்ன?**

- பொருளாதாரத்தில் உள்ள மொத்த பண அளவு.
- நாட்டில் உள்ள பண புழக்கத்தின் அளவு.
- வட்டி ,விலை, நிர்ணயிக்கும்.

**3. பண அளிப்பை தீர்மானிக்கும் காரணிகள்?**

- ரொக்க இருப்பு விகிதம்.
- ரொக்க வைப்பு விகிதம்.
- ரொக்க இருப்பு வைப்பு விகிதம்.
- சட்டப்பூர்வ நீர்மை விகிதம்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**4. பண வீக்கத்தின் வகை?**

- தவழும் ,நடக்கும், ஓடும், தாவும் பணவீக்கம்.
- தேவை இழுப்பு, செலவு உந்து பணம் வீக்கம்.

**5. தேவை இழுப்பு, பணவீக்கம் செலவு உந்து பணவீக்கம்?**

- **தேவை இழுப்பு பணவீக்கம்:** அளிப்பு நிலையாக உள்ள போது ,தேவை அதிகரித்தால் விலைவாசி உயரும்.
- **செலவு உந்து:** உற்பத்தி மூலப்பொருட்கள் செலவு உயர்ந்து ,விலைவாசி அதிகரித்தால் அதுவே செலவு உந்து பணவீக்கம்.

**6. பணம் மதிப்பு கேம்பிரிட்ஜ் சமன்பாடு?**

**மார்ஷல் சமன்பாடு:**

**M=KPY**

**M**-பணத்தின் அளவு,**Y**- வருமானம்,**P**- விலை,**K**- கையிருப்பு ரொக்கம்.

**கீன்சின் சமன்பாடு:**

**n=PK**

**n**-மொத்த பணம் அளிப்பு ,**P**-விலை,**K**- கையில் உள்ள வருமானம்.

**7. மீள் பணவீக்கம்?**

*வேலையின்மை ஏற்படுத்தாமலும், உற்பத்தி அளவுகள் குறையாமலும், பணவீக்கத்தை திருப்பும் செயல் முறையாகும்.

## 6. வங்கியில்

**1. நபார்டின் பணிகள்?**

- உற்பத்தி, முதலீடு விவசாயம், குடிசை தொழில் நடவடிக்கைகளுக்கு மறுக்கடனை வழங்குகிறது.
- கூட்டுறவு வங்கி, ஊரக வங்கி, நிலவள வங்கிகளுக்கு குறுகிய ,மத்திய, நீண்ட கால கடனை வழங்குகிறது.
- மாநில அரசுக்கு **20** ஆண்டுகால நீண்ட கால கடனை வழங்குகிறது.

**2. இந்திய தொழில் நிதி கழகம் பணி?**

- ரூபாய் மற்றும் வெளிநாட்டு பணத்தில் நீண்ட கால கடனை வழங்குகிறது.
- சம உரிமை, முன்னுரிமை பங்குகளின் கடன் பத்திரங்களை வாங்குகிறது.
- வெளிநாட்டு கடன்களுக்கு உத்தரவாதத்தை அளிக்கிறது.

**3. பண அங்காடி மூலதன அங்காடி வேறுபடுத்துக?**

| பண அங்காடி | மூலதன அங்காடி |
|---|---|
| *குறுகிய காலத்தைக் கொண்டது நிதி.<br>*ரிசர்வ் வங்கி, வெளிநாட்டு வங்கி ஆகியவை அங்கம் வகிக்கிறது. | *நீண்டகாலத்தை கொண்ட நிதி.<br>*தனி முதலீட்டாளர், நிதி நிறுவனம், நிதி கழகம் ,அரசு பங்குச் சந்தை, உள்ளிட்டவை உறுப்பினராக உள்ளது. |

**4. பண மதிப்பு நீக்கத்தின் நோக்கம்?**

- கருப்பு பணத்தை ஒழிப்பது.
- லஞ்சத்தை தடுப்பது.
- கள்ளப்பணத்தினை தடுப்பது.
- தீவிரவாதத்துக்கு பணம் செல்வதை தடுப்பது.

## 7. பன்னாட்டு பொருளியல்

**1. பன்னாட்டு பொருளியல் உள்ளடக்கத்தைப் பட்டியலிடுக?**

- *தூய வாணிப கோட்பாடு.
- *கொள்கை சச்சரவுகள்.
- *பன்னாட்டு வாணிப கூட்டமைப்பு ஒன்றியங்கள்.
- *பன்னாட்டு நிதி, வாணிப ஒழுங்குப்படுத்தும் நிறுவனங்கள்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**2. வாணிப கொடுப்பல் நிலைக்கும், அயல்நாட்டு செலுத்து சமநிலைக்கும் உள்ள வேறுபாடு?**

| வாணிப கொடுப்பல் நிலை: | அயல்நாட்டு செலுத்து சமநிலை: |
|---|---|
| *குறிப்பிட்ட ஆண்டின் பண்டங்களின் ஏற்றுமதி இறக்குமதி மதிப்பை குறிக்கும்.<br>*ஏற்றுமதி மற்றும் இறக்குமதி விவரங்கள் மட்டும் அளிக்கப் படுகிறது. | *பல நாடுகளுடன் மேற்கொள்ளப்படும் பொருளாதார பரிவர்த்தனையின் அறிக்கையாகும்.<br>*பண்டங்கள், பணிகள் ,மூலதன பணம் பரிமாற்றம் கொள்ளப்படுகிறது. |

**3. மாறுகின்ற பணமாற்று வீதம் பொருள்?**
- அன்னிய செலாவணி சந்தை விசைகளான தேவை, அளிப்பால் நிர்ணயிக்கப்படுகிறது.
- மாறுகின்ற அந்நிய செலாவணியான தேவை ,அளிப்பு பணமாற்று வீதத்தை நிர்ணயிக்கும் முறையாகும்.

**4. வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கம்?**
- விற்பனை விரிவுபடுத்துதல்.
- இயற்கை வளங்களை கையகப்படுத்துதல்.
- வாணிக பரவலாக்கம்.
- போட்டி இடர்களை குறைத்தல்.

## 8. பன்னாட்டு பொருளாதார அமைப்புகள்

**1. பொருளாதார ஒருங்கிணைப்பின் பல்வேறு வடிவங்கள்?**
- தடையற்ற வாணிக்க பகுதி **(SAFTA,EFTA).**
- சுங்கவரி ஒன்றியம் **(BENELUX).**
- பொதுச் சந்தை **(ECM).**
- பொருளாதார ஒன்றியம்**(European economic union).**

**2. வணிக ஒத்துழைப்பு தொகுதிகள்?**
- பிற நாட்டு பொருளாதாரத்துடன் தங்கள் நாட்டு பொருளாதாரத்தை இணைத்து புதிய வணிக வாய்ப்புகளை பெறுதல்.
- நாடுகள் இடையே பரஸ்பர நல்லிணக்கத்தை பேணுதல்.
- (எ.கா) தடையற்ற வாணிபகுதி, சுங்கவரி ஒன்றியம் ,பொதுச்சந்தை ,

**3. ஐ .எம். எப் கடன் வழங்கும் திட்டம் ஏதேனும் மூன்று?**
- அடிப்படைக் கடன் வசதி.
- விரிவாக்கப்பட்ட நிதி வசதி.
- ஈடுசெய் நிதி வசதி.
- தாங்கிருப்பு வசதி.

**4. பலதரப்பு ஒப்பந்தம்?**

பன்னாட்டு வாணிக ஒத்துழைப்பு தொகுதிகள், நாடுகள் ஒரே குழுவாக ஒன்றிணைந்து வாணிபத்தில் செயல்பட கூட்டமை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு செயல்படுவார்கள்.

**5. பிரிக்ஸ் மாநாடு 2018 நிகழ்ச்சி?**
- பத்தாவது உச்சி மாநாடு தென்னாபிரிக்கா ஜூலை **2018** இல் ஜோகன்ஸ் பர்க்கில் நடைபெற்றது.
- உள்ளடக்கிய வளர்ச்சி, வணிகப் பிரச்சினை ,உலகளாவிய நிர்வாகம், நாடுகளிடையே அமைதி இந்த உச்சி மாநாட்டின் விவாத தலைப்புகள் ஆகும்.

A. AYYAPPAN M.A. B.Ed., PG ASST. (ECONOMICS) GHSS ... RANIPET DISTRICT ... WALAJAPET

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**6. சார்க்கின் பணிகள்?**
- தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்பை பராமரித்தால்.
- உறுப்பு நாடுகளின் பிரச்சினையை தீர்வு காணுதல்.
- வறுமை ஒழிப்பு திட்டங்கள் மூலம் ஏழ்மையை ஒழிப்பது.
- பயங்கரவாத செயல்களை தடுப்பது.

**7. பிரிக்ஸ் அமைப்பின் சாதனை?**
- அவசரகால கையிருப்பு வசதியை உருவாக்கியதன் மூலம் நிதித்துறை பலப்படுத்தியது.
- பிரிக்ஸ்காக தனியான புதிய மேம்பாட்டு வங்கி தொடங்கியது.
- பொருளாதாரம் பலமும்,மக்கள் தொகையும், பிரிக்ஸ் நாட்டின் ஆதிக்கம் பன்னாட்டு நிர்வாக உறவில் உள்ளது.

## 9. நிதி பொருளியல்

**1. வரி விதிப்பு விதிகள்?**
- சிக்கன விதி.
- சமத்துவ விதி.
- வசதி விதி.
- உறுதி விதி.
- நெகிழ்வு விதி.

**2. தனியார் நிதி பொது நிதி ஒற்றுமைகள்?**
- **பகுத்தறிவும் தன்மை:** குறைந்த செலவில் அதிக நலத்தை பெறுவது *கடனுக்கான வரையறை கொண்டவை.
- **வளங்களின் பயன்பாடு:** இரண்டும் உத்தம அளவில் வளங்களை பயன்படுத்த முனைகிறது.
- **நிர்வாகம்:** இரண்டின் செயல் திறனை பொறுத்து அமையும்.

**3. நவீன அரசின் பணிகள் ?**
- தற்கால அரசு காவல் அரசு, நலம் பேணும் அரசாக உள்ளது.
- ராணுவம், நீதித்துறை ,சமூக நலன், கட்டமைப்பு, சமூக நீதி, போன்றவை அரசின் பணியாகும்.

**4. வரியின் மூன்று பண்புகள்?**
- அரசுக்கு கட்டாயம் செலுத்தக் கூடியது.
- எவ்வித பிரதிபலனும் எதிர்பார்க்காமல் வரி செலுத்த வேண்டியது.
- வரி செலுத்துவோரின் தியாகத்தை உள்ளடக்கியது.

**5. நேர்முக வரி ,முகவரி வேறுபாடுகள்?**

| நேர்முக வரிகள்: | மறைமுக வரி: |
|---|---|
| *வருமானத்தின் மீது விதிக்கப்படுவது.<br>*வரி ஏய்ப்பு உண்டு.<br>*மற்றவர் மீது மாற்ற முடியாது. | *பண்டங்கள் மீது விதிக்கப்படும்.<br>*வரி ஏய்ப்பு இல்லை.<br>*மற்றவர் மீது மாற்றக்கூடியது. |

**6. பொதுக் கடனை திரும்ப செலுத்துவதற்கான முறைகள்?**
- மூழ்கும் நிதி.
- கடனை மாற்றுதல்.
- உபரி வரவு செலவு திட்டம்.
- பகுதியாக செலுத்துதல்.

## 10. சுற்றுச்சூழல் பொருளியல்

**1. பல்வகையான காற்று மாசுகள்?**

**I. உட்புறக் காற்று மாசு:**

*மனிதர்கள் திட எரிபொருட்களை கொண்டு சமையல் செய்யும்போது ஏற்படும் மாசு.

**II. வெளிப்புற காற்று மாசு:**

*தொழிற்சாலைகளிலும், மோட்டார் வாகனங்களிலும் இருந்து வெளிவரும் திட, திரவ நச்சுக்களை குறிக்கும்.

M.A., B.Ed., AYYAPPAN PG ASST (ECONOMICS) GHSS, MINNAL, ARAKKONAM, RANIPET DISTRICT www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**2. நீர் மாசுக்கான காரணங்கள்:**
- கழிவுநீர் வெளியேற்றம் நீர் நிலைகளில் கலந்துவிடுதல்.
- திடக் கழிவுகள் நீர் நிலைகளில் கொட்டுதல்.
- கடலில் எண்ணெய் சிந்துதல்.
- அமில மழை காரணமாக நீர் மாசுபடுதல்.

**3. இ-கழிகள் என்பதன் பொருள்?**
- தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் இ-கழிவுகள் பொதுவாக மின்னணு கழிவுகள் எனப்படும்.
- **TV,AC,VCR,DVD, Mobiles** போன்ற வீட்டு உபயோக பொருட்கள்.

**4. நில மாசு என்றால் என்ன? காரணங்கள்?**
- கழிவுகளை கொட்டுவதால் நிலம் தரக்குறைவானதாக மாறுகிறது.
- திட, திரவ, வாயுகளால் நிலத்தின் தன்மை பாதிப்படைதல்.

**காரணங்கள்:**
- காடுகளை அழித்தல்.
- விவசாய நடவடிக்கைகள்.
- சுரங்க தொழில்கள்.
- தொழில் மயமாதல்.

**5. குறிப்பு வரைக: அ) பருவநிலை மாற்றம்.ஆ) அமில மழை.**

**அ) பருவநிலை மாற்றம்:**
வளிமண்டலத்தில் பசுமை வாயுக்கள் அதிகரித்ததால், ஏற்படும் நீண்ட கால பருவநிலை மாறுபாடகும்.

**ஆ) அமில மழை:**
காற்று மாசுவின் விளைவாக, வாயுக்கள் வளிமண்டலத்தில் நீர் துகள்களோடு இணைந்து ஏற்படும் விளைவு.(நைட்ரிக் அமிலமாகவும், சல்பியூரிக் அமிலமாகவும் மாறுதல்)

## 11. பொருளாதாரம் மேம்பாடு திட்டமிடுதல்

**1. வறுமை நச்சு சூழற்சிக்கான காரணங்கள்?**
- குறைவான வருமானம், குறைவான சேமிப்பு, குறைவான தேவை, குறைவான முதலீடு, குறைவான உற்பத்தி திறன், மேற்கண்ட காரணங்களால் (தேவை, அளிப்பு) பக்கம் நச்சு சுழற்சியை உருவாக்குகின்றன.

**2. பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கும், பொருளாதார சாராத காரணிகள்?**
- மனித வளம்.
- தொழில்நுட்ப அறிவு.
- அரசியல் சுதந்திரம்.
- சமூக அமைப்பு.
- ஊழலற்ற நிர்வாகம்.

**3. வறுமை நச்சு சுழற்சியை எப்படி தடுப்பது?**
- சரிசம வளர்ச்சி மூலம் தேவை பக்கத்தை உடைத்தெரியலாம் என்று நர்க்ஸ் கூறுகிறார்.
- ஒரு நாடு கடந்த கால சராசரி சேமிப்பு விகிதத்தை விட, இறுதிநிலை சேமிப்பு அளவு அதிகமாக இருக்குமாறு செய்ய வேண்டும்.( அளிப்பு பக்கத்தில்)

**4. திட்டமிடுதலுக்கு ஆதரவான கருத்துக்கள்?**
- வேலையின்மையை அகற்றுதல்.
- சமமான முன்னேற்றத்தை ஏற்படுத்துதல்.
- வேளாண்மை மற்றும் தொழில் துறையை முன்னேற்றுதல்.

**5. நிதி ஆயோக்கின் பணிகள்?**
- கூட்டுறவு, போட்டி அடிப்படையிலான கூட்டாட்சி.
- பரவலாக்கப்பட்ட திட்டமிடல்.
- தொலைநோக்கு காட்சி திட்டமிடல்.
- உகந்த தாக்குதல்.
- சச்சரவு தீர்த்தல்.
- வெளியுலக தொடர்பை ஒருங்கிணைத்தல்.

A. AYYAPPAN M.A., B.Ed. PG ASST (ECONOMICS) GBHSS, WALAJAPET, RANIPET DISTRICT

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## 12. புள்ளியியல் முறைகளும் பொருளாதார அளவையியலும் ஓர் அறிமுகம்

**1. புள்ளியியலின் பணிகள்?**

- விவரங்களை துல்லியமான வடிவில் வழங்குகிறது.
- பரந்த விவரங்களை சுருக்கி தருகிறது.
- ஒப்பீடுகளை செய்ய உதவுகிறது.
- எடுகோள்களை உருவாக்க உதவுகிறது.
- மதிப்பீடுகளை செய்ய உதவுகிறது.
- கொள்கைகளை உருவாக்க உதவுகிறது.

**2. பல்வகையான உடன் தொடர்புகளை விளக்குக?**

**<u>மாறியின் திசையில்:</u>**

நேர்மறை, எதிர்மறை உடன் தொடர்பு.

**<u>மாறியின் எண்ணிக்கையில்:</u>**

எளிய, பன்முக, பகுதி உடன் தொடர்பு.

**<u>மாறியின் விகிதத்தில்.</u>**

நேர்கோட்டு, வளைக்கோட்டு உடன் தொடர்பு.

**3. ஒட்டுறவு பகுப்பாய்வின் பயன்கள்?**

- இருமாறிகளின் ஒட்டுறவை விளக்க பயன்படுகிறது.
- இரு மாறியின் விளைவை ஆராய்ந்து, சார்பு தொடர்பை ஏற்படுத்த பயன்படுகிறது.
- நேர்கோடு அல்லாத தொடர்புகளை ஆய்வு செய்ய பயன்படுகிறது.

**4. பொருளாதார அளவையியலின் நோக்கங்கள்?**

- பொருளாதார நடவடிக்கைகளை முன் கணித்தல் மூலம் அறிய உதவுகிறது.
- மாறிகளுக்கு இடையே உள்ள பழைய நிறுவப்பட்ட உறவுகளை மீண்டும் நிரூபிக்க உதவுகிறது.
- புதிய கோட்பாடுகளையும், உறவுகளையும் நிறுவுவதற்கு உதவுகிறது.
- எடுகோள்களை சோதனை செய்யவும், பண்புகளை மதிப்பீடு செய்யவும் உதவுகிறது.

**5. இந்திய புள்ளியியல் ஆதாரம் அமைப்புகளின் முக்கியத்துவம்?**

- நாடு முழுவதும் நடைபெறும் புள்ளி விவரம் சேமிப்புகளை ஒருங்கிணைத்து, பரிசோதித்து, தரம் மேம்பாட்டினை உறுதி செய்கிறது.
- தேசிய கணக்குகளை ஒருங்கிணைப்பது, நுகர்வோர் குறியீட்டு எண்ணி அமைப்பது.
- **CSO,NSSO** இப்பணியினை மேற்கொள்ளும்.

Prepared by-
A. AYYAPPAN M.A., B.Ed.,
PG ASST ( ECONOMICS )
GBHSS, WALAJAPET, RANIPET DISTRICT

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## 1. பேரியல் பொருளாதாரம்

35. **பேரியல் பொருளியலின் பரப்பெல்லைகள் விவரி?**

பேரியல் பொருளாதாரத்தின் பரப்பெல்லை ஒட்டுமொத்த பகுதிகளை உள்ளடக்கியதாகவும் இருக்கிறது.

- **நாட்டு வருமானம்**

  ஒரு பொருளாதார அமைப்பின் நாட்டு வருமானம், வளர்ச்சி முறையின் நீண்ட கால அறிவைத் தருகிறது.
- **பணவீக்கம்**

  பணவீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதை குறிப்பதாகும்.
- **வாணிபச் சுழற்சி:**

  ஒரு நாட்டின் வாணிபச் சுழற்சி மாற்றங்களைத் (செழிப்பு, பின்னிறக்கம்,மந்த நிலை மற்றும் மீட்பு) தெரிந்துக் கொள்ள முடிகிறது.
- **வறுமை மற்றும் வேலையின்மை:**

  வறுமை மற்றும் வேலையின்மைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண, வளங்களை ஒதுக்கீடு செய்யவும், மேற்கொள்ளவும் பேரியல் பொருளாதாரம் உதவுகிறது.
- **பொருளாதார வளர்ச்சி:**

  பேரியல் பகுத்தாய்வின் மூலம் பொருளாதார அமைப்பின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம், புரிந்துக் கொள்ள முடியும்.
- **பொருளாதார கொள்கை:**

  பொருளாதார கொள்கைகளை உருவாக்குவதற்கு பேரியல் பொருளாதாரம் உதவுகிறது.

38. **முதலாளித்துவம் சமத்துவம் கலப்புத்துவம் தன்மைகளை ஒப்பிடுக.**

| வ.எண் | தன்மை | முதலாளித்துவம் | சமத்துவம் | கலப்புத்துவம் |
|---|---|---|---|---|
| 1 | நிறுவனம் | தனியார் நிறுவனம் | அரசு நிறுவனம் | தனியார்(ம)அரசு நிறுவனம் |
| 2 | உரிமை | தனியார் உரிமை | அரசு உரிமை | தனியார் (ம) அரசு உரிமை |
| 3 | நோக்கம் | லாபம் | சமூக நலன் | லாபம் (ம) சமூக நலன் |
| 4 | பங்கீடு | சமனற்ற நிலை | சமநிலை | குறைந்த சமநிலையற்ற நிலை |
| 5 | சிக்கல் | சமமின்மை | திறனின்மை | சமமின்மை திறனின்மை |
| 6 | தீர்வு | தடையில்லா சந்தை முறை | மத்திய திட்ட முறை | தடையில்லா சந்தை முறை மத்திய திட்டம் முறை |

## 2. நாட்டு வருமானம்

35. **நாட்டு வருமானத்தின் முக்கியத்துவத்தை விவரி?**

- பல்வேறு துறைகளுக்கு இடையே உள்ள முக்கியத்துவம் பற்றி அறிய பயன்படுகிறது.
- பணவியல் மற்றும் பொது நிதி கொள்கைகளை உருவாக்க ,சரியான வழிமுறைகளை கையாள உதவுகிறது.
- திட்டங்களின் விளைவுகளை மதிப்பிடுவதற்கு பயன்படுகிறது.
- குறுகிய கால மற்றும் நீண்ட கால பொருளாதாரம் மாதிரிகளில் உருவாக்க உதவுகிறது.
- மற்ற நாடுகளின் வருமானத்தோடு ஒப்பிட உதவுகிறது.
- தலா வருமானம் மூலம் நாட்டின் பொருளாதார நலனை அறிய பயன்படுகிறது.

36. **நாட்டு வருவாயை கணக்கிடும் முறைகளை விளக்குக?**

- மூன்று முறைகளை பயன்படுத்தி அளவிடலாம்.

  உற்பத்தி = வருமானம் =செலவு

  மூன்று முறையில் கணக்கிட்டால் மதிப்பு சமமாக இருக்கும்.

1. உற்பத்தி முறை:

  - ஒரு நாட்டின் உற்பத்தியை கணக்கிடுவது ,இம்முறை சரக்கு முறை என்றும் அழைக்கப்படுகின்றது.
  - ஒரு குறிப்பிட்ட ஆண்டில் விவசாயம், தொழில், வணிகம் போன்ற துறைகளின் உற்பத்தியின் மொத்தமே நாட்டு உற்பத்தி ஆகும்.

A. ANTHAPPAN, M.A., M.Ed. (ECONOMICS) PG ASST, GHSS, W... DISTRICT

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

2. வருமான முறை:

- நாட்டு வருவாய் கணக்கிடல் பகிர்வு பகுதியிலிருந்து அணுகப்படுகிறது. *உற்பத்தி காரணிகள் பெற்ற அனைத்துவித ஊதியங்களையும் கூட்டி நாட்டு வருமானத்தைக் கணக்கிடலாம். சம்பாதிக்கும் முறை என்றும் அழைக்கப்படுகிறது.

3. செலவு முறை:

- ஓர் ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொத்த செலவுகள் அனைத்தையும் கூட்டி நாட்டு வருவாய் கணக்கிடப்படுகிறது.
- GNP=C+I+G+(X-M)

  C-தனியார் நுகர்வுச்செலவு.

  I-தனியார் முதலீட்டுச் செலவு.

  G-அரசு செலவு.

  (X-M) - நிகர ஏற்றுமதி.

37. தேசிய வருவாயில் கணக்கெட்டில் உள்ள சிரமங்கள் யாவை?

1.மாற்றுச் செலுத்துதல்கள்

- ஓய்வூதியம், உதவித்தொகை, மானியங்கள், அரசு அளிக்கிறது.
- இதை நாட்டு வருவாயில் சேர்ப்பதில்லை.

2. தேய்மானம் கொடுப்பளவு மதிப்பிடுவதில் சிக்கல்

- தேய்மானம் கொடுப்பளவு விபத்து இழப்பீடு, பழுது கட்டணங்கள், நாட்டு வருவாயில் கழிப்பது கடினம்.

3. பணம் செலுத்தப்படாத சேவைகள்

- பெண்கள் வீட்டிலேயே செய்யும் வேலையை நாட்டு உற்பத்தியில் சேர்க்கப்படுவதில்லை.
- அர்ப்பணிப்பு பணிகள் ஆகிய உணவு தயாரித்தல், சுத்தம் செய்தல், குழந்தைகளை வளர்த்தல், துவைத்தல் போன்றவை.

4. சட்டவிரோத நடவடிக்கையில் பெறும் வருமானம்

- சூதாட்டம், கடத்தல், சட்ட விரோதமாக மது, தயாரித்தல் போன்றவற்றின் மூலம் நாட்டு வருமானத்தை கணக்கிடுவதில் சிக்கல்.

5. சொந்த நுகர்வுக்கு உற்பத்தி செய்தல் மற்றும் விலை மாற்றம்

- விவசாயிகள் தங்களின் சுயநுகர்வுக்காக உற்பத்தியில் ஒரு பகுதியை ஒதுக்கி வைக்கின்றனர்.
- அவ்வாறு ஒதுக்கியதை நாட்டு வருமானத்தில் கணக்கிடுவதில் சிக்கல்.

## 3. வேலை வாய்ப்பு வருமான கோட்பாடுகளும்

35. வேலையின்மைகளின் வகைகளை விவரி?

- வணிகச் சூழல் வேலையின்மை
  - ஒரு பொருளாதாரம் கீழ்நோக்கிய பகுதியில் இருக்கின்ற போது வேலையின்மை நிலவும்.
  - உற்பத்தி, வருமானம் குறைந்து வேலையின்மை அதிகரிக்கும்.
- பருவ கால வேலையின்மை
  - *ஒரு வருடத்தில் சில காலங்களில் மட்டுமே வேலையின்மை நிலவும்.
  - *(உ.தா) வேளாண்மையில்
- உடன்பாடில்லா வேலையின்மை
  - உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலை அற்ற தன்மை நிலவுவதால் ஏற்படும்.
- கற்றோர் வேலையின்மை
  - சில நேரங்களில் படித்து கல்வி தகுதி பெற்றவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை.
- தொழில் நுட்ப வேலையின்மை
  - புதிய தொழில்நுட்பத்தால், குறைந்த உழைப்பாளர்களே தேவைப்படுகின்றனர்.

    (உ.தா) இயந்திரம் பயன்படுத்துதல்

36. சேயின் அங்காடி விதியினை திறனாய்வு செய்க?

- *கீன்சின் கருத்துப்படி அளிப்பு அதற்கான தேவையை உருவாக்காது.
- *பொருளாதாரத்தில் தானாக சரி செய்து கொள்ளும் அமைப்பை வேலையின்மையை குறைக்காது.
- *பணம் நடுநிலையாக இருக்காது. வியாபாரிகள் எதிர்காலத்திற்காக பணத்தை இருப்பாக வைத்திருப்பர்.
- *அதிக உற்பத்திக்கு வாய்ப்பில்லை என்று சே கூறுகிறார். ஆனால் கீன்ஸ் அதிக உற்பத்திக்கு வாய்ப்பு உள்ளது என்கிறார்.
- கீன்ஸ் அரசின் தலையீடு அவசியம் என்கிறார். சே தலையிடா கொள்கை கூறுகிறார்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

37. தொன்மை கோட்பாடு, கின்சு கோட்பாடு வேறுபாடுகள்?

| கின்சியம் | தொன்மையியம் |
|---|---|
| 1. குறுகிய காலச் சமநிலை. | 1. நீண்ட கால சமநிலை. |
| 2. சேமிப்பு கெடுதல். | 2. சேமிப்பு நல்லது. |
| 3. பேரியல் அணுகுமுறை. | 3. நுண்ணியல் அணுகுமுறை. |
| 4. அரசு தலையீடு உண்டு. | 4. அரசு தலையீடு இல்லை. |
| 5. முதலாளித்துவம் தவறானது. | 5. முதலாளித்துவம் சரியானது. |
| 6. வட்டி வீதம் மாறும். | 6. வட்டி வீதம் மாறாது. |
| 7. தேவை அதன் அளிப்பை தானே உருவாக்கும். | 7. அளிப்பு அதன் தேவையை தானே உருவாக்கும். |

## 4. நுகர்வு சார்பும் முதலீடு சார்பும்.

37. நுகர்வு சார்பின் அக மற்றும் புற காரணிகளை விளக்குக?

- அக காரணிகள்:
  1. முன்னெச்சரிக்கை நோக்கம்
     எதிர்பாராமல் ஏற்படும் நிகழ்விற்காக கையில் வைத்திருக்கும் ரொக்கம்.
  2. எதிர்பார்க்கும் நோக்கம்
     எதிர்கால தேவைக்காக வைத்திருக்கும் ரொக்கம்.
  3. கணிக்கும் நோக்கம்
     விருப்பம் மற்றும் பாராட்டை அனுபவிப்பதற்கான விருப்பம்.
  4. முன்னேறும் நோக்கம்
     வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற விரும்புதல் சார்ந்த விருப்பம்.
  5. வாணிப நோக்கம்
     வியாபாரத்தில் முன்னேற்றதற்கான நோக்கம்.
- புற காரணிகள்:
  1. வருமான பகிர்வு
     சம அளவு வருமான பகிர்வு உள்ள பொருளாதாரத்தில், நுகர்வு அதிகரிக்கும்.
  2. விலை அளவு
     விலை குறையும்போது மக்கள் அதிகமாக நுகர்வார்கள்.
  3. கூலி அளவு
     கூலி அதிகரிக்கும் போது நுகர்வு செலவு அதிகரிக்கும்.
  4. வட்டி வீதம்
     அதிக வட்டி வீதம் சேமிப்பை அதிகப்படுத்தி, நுகர்வை குறைக்கும்.
  5. நிதி கொள்கை
     அரசு வரியை குறைத்தால், நுகர்வு அதிகரிக்கும்.

40. மூலதனத்தின் இறுதி நிலை உற்பத்தி திறனுக்கும் (MEC) முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தி திறக்கும் (MEI) உள்ள வேறுபாடு ?

| MEC | MEI |
|---|---|
| 1. மூலதனத்தின் அளிப்பு விலையை பொறுத்து அமையும். | 1. மூலதனத்தின் தேவை மாற்றத்தை பொறுத்து அமையும். |
| 2. ஒவ்வொரு மூலதன அளவில் இருந்து கிடைக்கும் விளைவைக் குறிக்கிறது. | 2. ஆரம்ப மூலதனத்துக்கு பின் வந்த விளைவு விகிதத்தை காட்டுகிறது. |
| 3. படுக்கை அச்சில் மூலதன இருப்பை அளக்கப்படுகிறது. | 3. படுக்கை அச்சியில் முதலீடு அளக்கப்படுகிறது. |
| 4. இது "இருப்பு" கருத்து (STOCK). | 4. இது "ஓட்ட கருத்து"(FLOW). |
| 5. ஒவ்வொரு வட்டி வீதத்திலும் உத்தம மூலதன இருப்பை நிர்ணயிக்கிறது. | 5. ஒவ்வொரு வட்டி வீதத்திலும் நிகர மூலதன இருப்பை நிர்ணயிக்கிறது. |

A. AYYAPPAN, M.A., B.Ed., PG ASST (ECONOMICS) GBHSS, PADIAJET, RANIPET DISTRICT

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**35. இர்விங் ஃபிஷரின் பண அளவு கோட்பாட்டினை விளக்கு?**

- பணத்தின் வாங்கும் சக்தி (1911)என்ற நூலில் பரிவர்த்தனைக்கான சமன்பாடு வாயிலாக பிஷர் விளக்குகிறார்.
- பண அளவு அதிகரிக்கும் போது பொது விலை மட்டம் அதிகரிக்கும். ஆனால் பணமதிப்பு குறையும்" என்பதை விளக்குகிறது.
- சமன்பாடு:

  MV=PT

  பண தேவை = பணம் அளிப்பு
- நவீன சமன்பாடு:

  (PT=MV+M1 V1) (P=MV+M1V1/T)

  M-மொத்த பண அளவு.


  V-பண சுழற்சி வேகம்.

  P-பொதுவிலை மட்டும்.

  T-வணிகத்தின் அளவு.

  M1-வங்கி பண அளவு.

  V1-வங்கி பணம் சுழற்சி வேகம்.




வரைபடம் (A)

பண அளவு அதிகரிக்க (M,M2,M3) அதிகரிக்க, விலை மட்டமும் (P,P2,P4) அதிகரிக்கும்.

வரைபடம்(B)

பண அளவு அதிகரிக்க (M , M2,M4) அதிகரிக்க, பண மதிப்பு(O/P,O/P2,O/P4) குறையும்.

**36. பணத்தின் பணிகள்?**

**1. முதன்மை பணிகள்:**

- *பணம் ஒரு பரிவர்த்தனை கருவியாகும்.
- *பணம் ஓர் மதிப்பின் அளவுகள் ஆகும்.

**2. இரண்டாம் நிலை பணிகள்:**

- ஒரு மதிப்பின் நிலைகலன் ஆகும்.
- *வருங்கால செலுத்துதல்களுக்கான ஒரு அடிப்படையாகும்.
- வாங்குத்திறனை மாற்றிக் கொள்ளும் ஒரு கருவியாகும்.

**3. துணைப் பணிகள்:**

- *கடனுக்கான அடிப்படையாகும்.
- *நாட்டு வருமான பங்கீட்டிற்கு உதவுகிறது.
- *இறுதிநிலை பயன்பாட்டையும், உற்பத்தி திறனையும் சமன் செய்திட உதவுகிறது.
- *மூலதனத்தின் உற்பத்தித்திறனை உயர்த்துகிறது.

**4. இதரப் பணிகள்:**

- திரும்பச் செலுத்து திறனை தக்கவைக்க உதவுகிறது.
- பொதுமைப்படுத்தப்பட்ட வாங்குத்திறனை குறிக்கிறது.
- மூலதனத்திற்கு நீர்மை தன்மை தருகிறது.

**37. பணவிக்கதற்கான காரணங்கள், விளைவுகள் யாவை?**

**(காரணங்கள்)**

**1. பண அளிப்பு உயர்வு:**

- பணம் அளிப்பு உயர்வதால் தேவை அதிகரித்து பணவீக்கம் ஏற்படுகிறது.

**2. செலவிட தகுந்த வருமான உயர்வு:**

- வருமானம் அதிகரிக்கும் போது தேவை அதிகரித்து பணவீக்கம் ஏற்படுகிறது.

**3. உயர்ந்து வரும் பொதுச் செலவுகள்:**

- அரசின் நல திட்டங்கள் செயல்கள் மூலம் பணவீக்கம் ஏற்படுகிறது.

**4. நுகர்வோர் செலவு அதிகரித்தல்:**

- தவணை கொள்முதல், கடன் கொள்முதல் மூலம் தேவை அதிகரித்து பணவீக்கம் ஏற்படுகிறது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

5. மலிவு பண கொள்கை:

- மலிவு பணக்கொள்கையால் கடன் வாங்குதிறன் அதிகரித்து பணம் வீக்கம் ஏற்படுகிறது.

(விளைவுகள்)

1. உற்பத்தி மீதான விளைவு:

- மிதப்பண வீக்கம் உற்பத்தியாளர், வணிகர்களுக்கு ஊக்க காரணியாக செயல்படும்.

2. பகிர்வின் மீதான விளைவுகள்:

- கடன் வழங்கியோர், நிலையான வருவாய் பெறுபவர் பாதிக்கப்படுகின்றனர்.
- கடன் பெற்றோர், தொழில் முனைவோர், முதலீட்டாளர்கள் ஆதாயம் அடைகின்றனர்.

38. வணிகச் சுழற்சியின் பல்வேறு கட்டங்கள்?

1. பூரிப்பு:

- அனைத்து பொருளாதார நடவடிக்கைகள் உச்ச நிலையில் இருக்கும்.
- வளர்ச்சி கட்டத்தின் உச்சநிலையாகும்.

2. பின்னிறக்கம்:

- பூரிப்பில் ஏற்பட்ட நடவடிக்கையால் பொருளாதார பின்னோக்கி திரும்புவதை குறிக்கும்.
- பொருளாதார நடவடிக்கை குறைய தொடங்கும்.

3. மந்தம்:

- மூன்றாவது கட்டமாக பொருளாதார நடவடிக்கைகள் இயல்பு நிலைக்கு கீழ் மிக தீவிரமாக குறையும்.
- நிறுவன நட்டம், வேலையின்மை, உற்பத்தியில் மந்தம் ஏற்படும்.

4. மீட்சி:

- இது பொருளாதாரம் மந்தத்திலிருந்து மேல்நோக்கி திரும்பும் நிகழ்வாகும்
- மூலதன பொருட்களுக்கான தேவை, அரசின் தன்னிச்சை முதலீடு போன்றவைகள் பொருளாதாரம் மேல்நோக்கி திரும்ப ஊக்கமளிக்கும்.

## 6. வங்கியியல்

35. பொருளாதார மேம்பாட்டில்வணிக வங்கியின் பங்கு?

1. மூலதன திரட்சி:

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய மூலதன திரட்சியில் வங்கி அவசியம்.

2. கடன் உருவாக்கம்:

முன்னேற்றத் திட்டங்களுக்கு கடன் உருவாக்கம் மூலம் நிதி பெற்று தருகிறது.

3. நிதியை முறைப்படுத்துதல்:

அதிக உற்பத்தி திறன் கொண்ட துறைகளுக்கு கூடுதலாக கடனை வழங்கி மடைமாற்றம் செய்கிறது.

4. அரசிற்கு நிதி வழங்குகிறது.

அரசுக்கு நீண்டகால ,குறுகிய கால கடன்களை அரசு பத்திரங்கள் மூலம் கடன் வழங்குகிறது.

5. வேலை வாய்ப்பினை உருவாக்குதல்:

வங்கி கிளைகள் பெருமளவு திறக்கப்பட்டதால், கடன்கள் அதிகப்படுத்தப்பட்டு வேலை வாய்ப்பு உருவாக்கப்படுகிறது.

36. வணிக வங்கிகளின் பணிகள்?

1. முதன்மைப் பணிகள்:

- *பொது மக்களின் வைப்புகளை ஏற்றுக் கொள்ளுதல் (காலவைப்பு, கேட்டுவைப்பு).
- *தனிநபர்கள் ,வாணிகத்திற்கு கடன்களை வழங்குகிறது.

2. இரண்டாம் நிலை பணிகள்:

முகமை பணிகள்.

- காசோலையை பணமாக்குதல்.
- வருமானத்தைப் பெறுதல்.
- செலவுகளை செலுத்துகிறது.

பொது பயன்பாட்டு பணிகள்.

- பாதுகாப்பு பெட்டக வசதி ஏற்படுத்தி தருகிறது.
- அந்நிய செலாவணி கையாளுதல்.
- நிதியை மாற்றுகிறது.
- கடன் உறுதியளிப்பு கடிதம் வழங்குகிறது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

3. இதரப் பணிகள்:

- பண புழக்கத்தின் மூலம் பண அளிப்பை அதிகரிக்கிறது.
- மொத்த பணம் அளிப்பில், கடன் பணத்தின் அளவினை அதிகரிப்பது "கடன் உருவாக்கமாகும்".
- விவசாயம், தொழில், வணிகம், போன்றவற்றிற்கு நிதி அடிப்படையில் புள்ளி விவரங்களை திரட்டுகிறது.

37. இந்திய ரிசர்வ் வங்கியின் பணி?

1.பணம் அதிகாரம் அமைப்பு:
வங்கி அமைப்பை உறுதியாக்குதல், பணம் வீக்கத்தை கட்டுப்படுத்துதல் பணி செய்கிறது.

2. காகித பணம் வெளியீடு:
காகித பணத்தின் வெளியிடுவதில் முற்றுமை பெற்று மேலாண்மை செய்கிறது.

3. வங்கி உரிமம் வழங்குதல்:
வங்கித் தொழில் செய்ய மைய வங்கியிடம் அனுமதி பெற வேண்டும்.

4. அரசுக்கான வங்கி:
இது மத்திய மாநில அரசுக்கான வங்கி ஆகும்.

5. வங்கிகளின் வங்கி:
இது அனைத்து வங்கிகளுக்கும் தலைமை வங்கியாகும்.

6. கடைசிநிலை கடன் ஈவோன்:
வணிக வங்கிகள் சிக்கலில் இருந்து மீள்வதற்கு ஈட்டுக்கடனை அளித்து உதவுகிறது.

7. தீர்வாக செயல்படுகின்றது:
பரிவர்த்தனை தொடர்பான அனைத்து அறிவுறுத்தல்களை வழங்குகிறது.

8. அந்நிய செலாவணி பாதுகாவலன்:
அந்நிய செலாவணி இருப்புகளை பாதுகாக்கும் பாதுகாவலனாக விளங்குகிறது.

38. பணவியல் கொள்கையின் நோக்கங்கள் யாவை?

1. நடுநிலைத் தன்மை:
பொருளாதாரத்தில் பணத்தில் மாற்றம் ஏற்படாமல் நடுநிலைத் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும்.

2. விகித நிலைத்தன்மை:
பரிமாற்ற விகிதத்தில் நிலையற்ற தன்மை இருந்தால் அது செலுத்து சமநிலையை பாதிக்கும். ஆகவே விகிதங்களின் நிலைத்தன்மை இருக்க வேண்டும்.

3. விலை நிலைத்தன்மை:
பொருளாதாரத்தில் விலை மாறாமல் நிலையாக இருந்தால்,மிதமான விலை ஏற்றத்தில் பொருளாதாரம் வளர்ச்சி பெறும்.

4. முழு வேலைவாய்ப்பு:
முழு வேலை வாய்ப்பு என்பது பணவியல் கொள்கையின் முக்கிய நோக்கமாகும்.

5. பொருளாதார வளர்ச்சி:
நீண்ட காலத்தில் உண்மை தலா வருவாய் அதிகரித்து, நீடித்த பொருளாதார வளர்ச்சி ஏற்படுத்துவது பணவியல் கொள்கையின் நோக்கமாகும்.

P. AYYAPPAN, M.A., B.Ed., PG ASST IN ECONOMICS, GBHSS, WALAJAPET, RANIPET DISTRICT

## 7. பன்னாட்டு பொருளியல்

35. உள்நாட்டு வாணிகத்திற்கும், பன்னாட்டு வாணிகத்திற்கும் உள்ள வேறுபாடு?

| உள்நாட்டு வாணிகம் | பன்னாட்டு வாணிகம் |
|---|---|
| 1. ஒரு நாட்டிற்குள் நடைபெறும். | 1. பல நாடுகள் இடையே நடைபெறும். |
| 2. உழைப்பு ,மூலதனம் இடம்பெயர தடை இல்லை. | 2. உழைப்பும்,மூலதனமும் இடம்பெயர தடை உண்டு. |
| 3. பண்டம், பணிகள் இடம்பெயர தடையில்லை. | 3. பண்டம்,பணிகள் இடம்பெயர தடைகள் உண்டு. |
| 4. ஒரே ஒரு பணம் பயன்படுத்தப்படும். | 4. பல நாட்டு பணம் பயன்படுத்தப்படும். |
| 5. புவி அமைப்பு,காலநிலை ஒரே மாதிரி இருக்கும். | 5.புவி அமைப்பு, காலநிலை வேறுபட்டு இருக்கும். |
| 6. பழக்கவழக்கம் ,அரசின் கொள்கையில் வேறுபாடு இல்லை. | 6.பழக்கவழக்கம், அரசின் கொள்கை வேறுபாடு உண்டு. |

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

40. அயல்நாட்டு செலுத்து நிலை சமமின்மை வகைகளை விவரி?

1. சுழற்சி சமனற்ற நிலை:

- வாணிப சுழற்சியின் விளைவாக ஏற்படுகிறது.

அ) நாடுகள் வாணிப சுழற்சியின் பல்வேறு கட்டங்களில் இருப்பது.

ஆ) நாடுகளிடையே தேவை நிகழ்வு அளவு மாறுபடுவது.

2. நீண்ட கால சமனற்ற நிலை:

- நாடுகள் பொருளாதார வளர்ச்சி ஏற்படும் போது இது உண்டாகும்.
- அயல்நாட்டு செலுத்து சமனற்ற நிலையை நீண்ட கால சமனற்ற நிலை எனலாம்.

3. கட்டமைப்பு சமனற்ற நிலை:

- நாட்டின் பொருளாதார கட்டமைப்பு மாற்றத்தால் ஏற்படும்.
- மாற்று வழங்கல் ,செயற்கை பதிலிட்டு பண்டங்கள் கண்டுபிடித்தல்.
- வளங்கள் தீர்ந்து போதல்,போக்குவரத்து வழி, செலவு மாற்றமடைதல் போன்றவற்றால் ஏற்படும்.

41. பண மாற்று வீதம் எவ்வாறு இரண்டு முறைகளில் நிர்ணயமாகிறது (எ.கா) விளக்குக?

பணமாற்று வீதம்:

ஒரு அலகு அயல்நாட்டு பணத்தை பெறுவதற்கு,எத்தனை அலகு உள்நாட்டு பணத்தை கொடுக்கிறோம் என்பதை குறிக்கும்.

1.. மாறாத பணமாற்று வீதம்:

*ஒரு அரசு மைய வங்கியின் மூலம் பணம் மாற்றம் வீதம் நிர்ணயித்தால், அது நிலையான பணம் மாற்றும் வீதம் ஆகும்.

2. மாறும் பணமாற்று வீதம்:

*தேவை மற்றும் அளிப்பால் நிர்ணயிக்கப்படுகிறது.

*மாறும் அந்நிய செலாவணிக்கான தேவை, அளிப்பும் பணம் மாற்று வீதம் நிர்ணயிக்கும்.

42. வெளிநாட்டு நேரடி முதலீட்டின் நன்மைகள்?

1. நாட்டின் வேலைவாய்ப்பை அதிகரிக்கும்.
2. புதிய தொழில்நுட்பத்தை கொண்டு வருகிறது.
3. நிறுவன வரி மூலம் வருவாயை கொண்டு வருதல்.
4. தொழில் வளம் பெறுகுதல்.
5. புதிய தொழில் மேலாண்மையை அறிமுகப்படுத்துதல்.
6. அயல்நாட்டு செலுத்து நிலை சமமின்மையை நீக்குதல்.
7. உள்நாட்டு சிறு தொழில்கள் வளர உதவுதல்.

## 8. பன்னாட்டு பொருளாதார அமைப்புகள்

35. பன்னாட்டு பண நிதியத்தின் நோக்கங்கள்?

1. உறுப்பு நாடுகளுக்கு இடையே பணவியல் ஒத்துழைப்பை வழங்குதல்.
2. பன்னாட்டு வாணிபம் சமச்சீராக வளர உதவுகிறது.
3. உறுப்பு நாடுகளின் நாணய மாற்று விகிதம் நிலையாக இருக்கச் செய்தல்.
4. உறுப்பு நாடுகள் விதிக்கும் செலாவணி கட்டுப்பாடுகளை நீக்குதல்.
5. பன்னாட்டு நீர்மை பிரச்சனைக்கு தீர்வு காணுதல்.

36. உலக வங்கியின் பணிகளை வெளிக்கொணர்க?

1. உற்பத்திக்கு ஊக்கமளிக்கும் முதலீட்டுக்கான கடன் உதவி:

*உறுப்பு நாடுகளின் மறுகட்டமைப்பு,மேம்பாட்டுக்கு உதவுதல்.

*பின் தங்கிய நாடுகளின் வளர்ச்சிக்கு.

2. பன்னாட்டு வாணிகத்தின் சரிவிகித வளர்ச்சி:

*நீண்டகால வளர்ச்சிக்கு உதவுதல், அயல்நாட்டு சமநிலையை அடையச் செய்தல்.

3. கடன், ஈட்டுறுதியை முக்கிய திட்டங்களுக்கு வழங்குதல்.

4. வெளிநாட்டு தனியார் முதலீட்டிற்கு ஈட்டுறுதி வழங்கி ஊக்கமளிக்கிறது.

5. நிபுணர்களைக் கொண்டு தொழில்நுட்ப ஆலோசனை உறுப்பு நாடுகளுக்கு வழங்குகிறது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

37. **இந்திய சமூக பொருளாதார மேம்பாட்டில் WTO பங்கு?**

1. இறக்குமதி வரி குறைக்கப்பட்டதால், இடுபொருட்கள், உதிரி பாகம்,இயந்திரங்கள் ,இந்தியாவுக்கு குறைவான விலையில் அதிகமாக கிடைத்தது.
2. இந்திய பொருட்களை பல நாடுகளில் விற்பனை செய்ய முடிகிறது.
3. குறைவான செலவில் உயர் தொழில்நுட்பம் கிடைத்துள்ளது.
4. பன்னாட்டு பரிவர்த்தனையின் புகார்களுக்கு எளிதில் தீர்வு கிடைக்க வழி செய்கிறது.
5. பரந்த சந்தையின் மூலம் இந்திய ஏற்றுமதியாளர்கள் அதிக பலனை அடைகின்றனர்.

38. **குறிப்பு எழுதுக: அ) சார்க் ஆ) பிரிக்ஸ்**

**அ) சார்க்:**

*1985 டிசம்பர் 8, உருவாக்கப்பட்டது.(காத்மாண்டு)

*இந்தியா ,வங்கதேசம், பூட்டான் மாலத்தீவு ,நேபாளம், பாகிஸ்தான் இலங்கை, ஆப்கானிஸ்தான் ஆகிய எட்டு நாடுகளை உள்ளடக்கியது.

*தெற்காசிய நாடுகளின் பொருளாதார, வாணிக ஒத்துழைப்பை, தற்சார்பை ஏற்படுத்துதல்.

**ஆ) பிரிக்ஸ்:**

*2001ல் உருவாக்கப்பட்டது. (ஷாங்காய்)

*பிரேசில், ரஷ்யா,இந்தியா, சீனா, தென் ஆப்பிரிக்கா ஆகிய ஐந்து நாடுகளில் உள்ளடக்கியது.

*மண்டல வாணிக ஒத்துழைப்பு மேம்பாடு. வாணிகம், அமைதி, பாதுகாப்பு ஆகியவை முக்கிய நோக்கமாகும்.

## 9. நிதிப் பொருளியல்

A. AYYAPPAN, M.A., B.Ed., PG ASST. ECONOMICS, GBHSS WALAJAPET, RANIPET DISTRICT

35. **பொது நிதியின் எல்லைகளை விளக்குக?**

**1. பொது வருவாய்:**

அரசின் வரி மற்றும் வரியில்லா வருவாய் உள்ளடக்கியது.

**2. பொதுச் செலவு:**

அரசின் செலவுகள் விளைவுகளை கட்டுப்படுத்துவதை உள்ளடக்கியது.

**3. பொதுக் கடன்:**

அரசு பெறும் உள்நாட்டு,வெளிநாட்டு கடனை குறிக்கும்.

**4. நிதி நிர்வாகம்:**

அரசின் வரவு செலவு திட்டத்தை பற்றியது.

**5. நிதி கொள்கை:**

வரி,மானியங்கள்,பொதுக்கடன்,பொதுச் செலவு ஆகியவற்றை உள்ளடக்கியது

36. **மறைமுக வரியின் நன்மைகள்?**

**1. பரந்து காணப்படுதல்:**

*ஏழை பணக்காரர் பாகுபாடின்றி அனைவரும் வரி செலுத்த வேண்டும்.

**2. சமத்துவம்:**

*ஆடம்பர பொருட்கள் மீது அதிகமாகவும்,அத்தியாவசிய பொருட்கள் மீது குறைவாகும் விதிக்கப்படுகிறது.

**3. சிக்கன தன்மை:**

*விற்பனையாளரே பொருளுடன் சேர்ந்து வரிவசூலிப்பதால்,அரசுக்கு சிக்கனம் ஏற்படுகிறது.

**4. உடலுக்கு தீங்கான பொருட்களை குறைத்தால்:**

புகையிலை,மது போன்றவற்றுக்கு அதிக வரி வசூலிக்கப்படுகிறது.

**5. வசதியானது:**

பண்டத்துடன் சேர்த்து வரி செலுத்துவதால் மிகவும் வசதியானது.

37. **கடனை திரும்ப செலுத்தும் முறைகள்?**

1. மூழ்கும் நிதி
2. கடனை மாற்றுதல்
3. உபரி வரவு செலவு திட்டம்
4. பகுதியாக செலுத்துதல்
5. கடன் மறுப்பு

38. **நிதிக் கொள்கையின் கருவிகள் எவை?விளக்குக?**

1. வரி விதித்தால்.
2. பொதுச் செலவு.
3. பொதுக் கடன்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

39. கூட்டாட்சி நிதியின் கொள்கைகளை விளக்குக?

1. சுதந்திரம்
2. சமத்துவம்
3. ஒரே மாதிரியான தன்மை
4. போதுமான வளங்களை பெற்றிருத்தல்
5. நிதி வசதி

41. அரசு செலவு அதிகரிப்பதற்கான காரணங்கள்?

1. மக்கள் தொகை வளர்ச்சி.
2. பாதுகாப்பு செலவு.
3. அரசு மானியங்கள்.
4. கடன் சேவைகள்.
5. வளர்ச்சி திட்டங்கள்.

40. வரவு செலவு திட்டத்தில் உள்ள பலவகை பற்றாக்குறைகளை விளக்குக?

1. வருவாய் பற்றாக்குறை:
*அரசின் வருவாயை விட,செலவு அதிகம்.
2. வரவு செலவு திட்ட பற்றாக்குறை:
*மொத்த வரவுக்கும் செலவுக்கும் உள்ள இடைவெளியை குறிக்கும்.
3. நிதி பற்றாக்குறை:
*வரவு செலவு திட்ட அறிக்கையை விட அதிகமாக இருக்கும்.
4. முதன்மை பற்றாக்குறை:
*நிதி பற்றாக்குறையில் வட்டி செலுத்தியதை போக மீதமுள்ள பற்றாக்குறையை குறிக்கும்.

## 10. சுற்றுச்சூழல் பொருளியல்

37. நீடித்த அல்லது வளம் கொண்ட வளர்ச்சி முக்கியத்துவம் அதன் நோக்கங்களை விளக்குக?

நீடித்த நிலையான மேம்பாடு:
தற்போது உள்ள மக்களுக்கு மட்டுமின்றி, எதிர்கால மக்களுக்கு தேவையான வளங்களை விட்டு அடைகின்ற மேம்பாடு.

வளம்குன்றா வளர்ச்சி:
வளர்ச்சி,சமூகநலன், பாதுகாப்பு ஆகிய மூன்று குறிக்கோளையும் சேர்த்து சாதிப்பதை குறிக்கும்.

நோக்கங்கள்:
1. வறுமையை ஒழித்தல்.
2. பாலின சமத்துவம்..
3. சிறந்த உடல்நலம்.
4. தரமான கல்வி.
5. சுத்தமான குடிநீர், சுகாதாரம்.
6. ஏற்றத்தாழ்வுகளை குறைத்தல்.
7. நல்ல வேலை, பொருளாதார வளர்ச்சி.

## 11. பொருளாதார மேம்பாடும் திட்டமிடலும்

36. பல்வேறு வகையான திட்டமிடல் வகைகள்?

1. மக்களாட்சி மற்றும் சர்வாதிகார திட்டமிடல்:
*திட்டம் தயாரித்தல், செயல்படுத்ததில் மக்கள் பங்குவகிப்பது.
*மைய திட்ட குழு ஒரு திட்டத்தை வைத்து விரும்பிய திசையில் செயல்படுத்துவது.
2. மையப்படுத்தப்பட்ட மற்றும் பரவலாக்கப்பட்ட திட்டமிடல்:
*அனைத்து திட்ட நடவடிக்கையும் மைய திட்ட கட்டுப்பாட்டில் இருக்கும்.
*உள்ளூர் அமைப்புகளின் மூலம் திட்டத்தை செயல்படுத்துதல்.
3. வழிகாட்டும் மற்றும் தூண்டும் திட்டமிடல்:
*திட்ட க் குழு வழிகாட்டுதலின் மூலம் திட்டங்களை செயல்படுத்துதல்.
*திட்டக்குழு நிர்ணயித்த இலக்கினை மக்களை கொண்டு செயல்படுத்துதல்.
4. குறுகிய, நடுத்தர, நீண்ட கால திட்டமிடல்:
*ஓராண்டில் செயல்படுத்தப்படும் திட்டங்களை குறிக்கும்.
*3 முதல் 7 ஆண்டு காலத்தில் முடிவடையும் திட்டங்களை குறிக்கும்.
*10 முதல் 30 ஆண்டுகளுக்கு திட்டமிட்ட மாற்றங்களை கொண்டுவருதல்.
5. செயல்பாட்டு மற்றும் அமைப்பு திட்டமிடல்:
*நாட்டின் சமூக அமைப்பை மாற்றாமல் திட்ட இலக்குகளை அடைவது.
*நாட்டிலன் சமூக அமைப்பை மாற்றங்களை செய்து திட்ட இலக்குகளை அடைவது.

A. AYYAPPAN, M.A., B.Ed., PG ASST (ECONOMICS) GBHSS, WALAJAPET, RANIPET DISTRICT
www.Padasalai.Net

35. பொருளாதாரம் முன்னேற்றத்தை தீர்மானிக்கும் பொருளாதாரம் சார்ந்த காரணிகள்?

1. இயற்கை வளங்கள்.
2. மூலதன உருவாக்கம்.
3. சந்தையின் அளவு.
4. விற்பனைக்குரிய உபரி.
5. பன்னாட்டு வாணிகம்.

**37. திட்டமிடலுக்கு எதிரான வாதங்கள்?**

1. தன் விரும்பாமல் செயல்பட இயலாமை.
2. தன் முனைப்பை குறைத்தல்.
3. அதிகமான நிர்வாகச் செலவு.
4. முன் கணிப்பதில் உள்ள சிரமங்கள்.

## 12. புள்ளியல் முறைகளும் பொருளாதார அளவில் ஓர் அறிமுகம்

**35. புள்ளிகளின் இயல்பும் எல்லைகள்?**

**புள்ளியியலின் இயல்புகள்:**

1. அறிவியல், கலையில் இரண்டையும் ஒன்றிணைந்தது.
2. ஒரு முறைப்படுத்தப்பட்ட தொகுப்பாகும்.
3. கோட்பாடுகளை உருவாக்கவும், சோதனை, துல்லிய முடிவுகளை எடுக்க உதவுகிறது.

**புள்ளியல் எல்லைகள்:**

1. பொருளியலில் புள்ளியல்.
2. தொழிலில் புள்ளியல்.
3. புள்ளியிலும் வாணிகமும்.
4. புள்ளியலம் கல்வியியலும்.
5. புள்ளியலம் திட்டமிடலம்.
6. புள்ளியலம் மருத்துவமும்.

**38. பொருளியலில் பொருளாதார அளவையியலின் பயன்பாடுகளை விளக்குக?**

**1. பேரியல் பொருளாதார நடவடிக்கைகளை முன் கணித்தல்:**

- பொருளாதார கோட்பாடுகளுக்கும், நடைமுறை விவரங்களை அளிப்பதற்கு உதவுகிறது
- முன் கணித்தல், சோதனையிட தீர்வு காண உதவுகிறது.

**2. கணிதப் பொருளியலில் மாதிரிகளை வடிவமைக்க:**

- பொருளியல் விவரங்கள் மீது கணித புள்ளியியலை புகுத்தி பொருளாதார மாதிரிகளை உருவாக்க உதவுகிறது.
- எண்ணிக்கை முடிவைகளை, சோதனை அடிப்படையில் தீர்வுக்கான உதவுகிறது .

Prepared by-
A. AYYAPPAN M.A., B.Ed.,
PG ASST ( ECONOMICS )
GBHSS, WALAJAPET, RANIPET DISTRICT